# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1201/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | மாரிமுத்து | த-பெ | கருப்பையா |
| ஊர்: | : | P.புத்தூர் | | |
| வயது: | : | 40/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் | மாவட்டம் | இராமநாதபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.07.2026

**எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சி சென்னை மாநகர உரிமையியல் மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளிக்கிறார்.**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் P.புத்தூரில் வசித்து சென்னை விமான குடியேற்ற பிரிவு சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு அழகப்பாபுரம் காவல் நிலையத்தில் 2019 ம் வருடம் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது 21.12.2019 அன்று 18.00 மணிக்கு நிலைய பணியில் இருந்தபோது ராதா என்பவர் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.111/2019 இதச பிரிவுகள் 294(b),324,506(ii) & 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ 4.** பின்னர் வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1முதல் 5 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் சம்பவ இடம் சென்று சம்பவ இட சாட்சிகள் குலவையா மற்றும் பிரபு குமார் ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அசாஆ 5**.

அன்றைய தினமே 19.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்தை அத்தாட்சியில் வாதியில் வீட்டின் முன்பாக கைப்பற்றினேன். **அத்தாட்சி அசாஆ 6**. பின்னர் வழக்கின் எதிரியை 20.00 மணிக்கு காரைக்குடி இரயில்வே ரோட்டில் ஐயங்கார் பேக்கரி அருகே நின்று கொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்த தக்க வழிகாவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் சொத்தினை படிவம் 95 ம் வாயிலான ஆஜர் செய்தேன். **படிவம் 95 அசாஆ 7. அதிலுள்ள வழக்கு சொத்து சா.பொ1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த முத்து குமார் அரசு உதவி மருத்துவர் காரைக்குடி என்பவரை விசாரணை செய்த அவரிடம் இருந்த காய சான்றிதழ்

பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கின் விசாரணையை நிறைவு செய்து எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 27.01.2020 அன்று மேற்சொன்ன பிரிவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கின் எதிரி அசா1 ன் கணவரின் சகோதரர் என்றால் சரிதான். அவர்கள் உறவு முறை குறித்து விசாரணை செய்தேனா என்றால் அசா1 ஐ விசாரணை செய்தபோது அவரே சொன்னார். அசா1 க்கும் எதிரிக்கும் இடையே சொத்து தகராறு உள்ளது என்று விசாரணையில் தெரிந்த கொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்த தேதி என்ன என்றால் 21.12.2019. சம்பவம் நடந்த நேரம் என்ன என்றால் காலை 10.30. காவல் நிலையத்தில் எப்போது புகார் அளிக்கப்பட்டது என்றால் 21.12.2019 அன்று மாலை 6.00 மணிக்கு புகார் கொடுக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கும் காவல் நிலையத்தில் எவ்வளவு தூரம் என்றால் 1 கிமீ இருக்கும். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு நடந்து வந்தால் அரை மணி நேரத்திற்குள் வந்துவிடலாம் என்றால் சரிதான். இடைப்பட்ட கால தாமதத்திற்கு காரணங்கள் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி கால தாமதத்தை குறித்து நானும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்திருந்தால் உடனடியாக காவல் நிலையத்தில் ஆஜர் ஆகி புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் அனைவரும் அசா1 ன் உறவினர் என்றால் சரியல்ல. பார்வைமகஜர், அத்தாட்சி மகஜர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் எந்த ஒரு பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் சொன்னதுபோல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.03 10:57:28 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.